உ

சிவமயம்

# ஏழாலை அத்தியடி விநாயகர்
# கும்பாபிஷேக மலர்
## 10.02.2019



சித்திதரும் புத்திவருஞ் செல்வமொடு கல்விவரும்
பத்திவருங் கீர்த்தி பரம்பிவரும் - அத்தி
யடிவாழ் விநாயகனை யன்போடு நம்பிப்
படிமேல் வணங்கு பவர்க்கு[1]

வெளியீடு
ஏழாலை அத்தியடி விநாயகர் தேவஸ்தானம்

## நல்லை ஆதீன முதல்வரின் வாழ்த்துச் செய்தி



முதல் வணக்கம், முதற்பூசை, முதற் படையல் என்று எல்லாவற்றிலுமே விநாயகப் பெருமானுக்கு முதன்மை கொடுப்பது எம் மதத்தவரிடையே ஒரு வழமையாகி, மரபாகி, முழு நம்பிக்கையாகிக் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, எமது ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் யாழ்ப்பாண மண்ணில் இந்த வழமை நன்கு வேரூன்றி உள்ளதென்று சொல்ல லாம்.

ஏழாலைக் கிராமத்தின் பெயர்க்காரணமாகிய ஏழு கோயில்களில் முதன்மையும் பழமையும் கொண்டதும் நீண்ட வரலாற்றைக் கொண்டது மாகிய அத்தியடி விநாயகப் பெருமானுக்கு திருக்குடமுழுக்குப் பெருஞ்சாந்தி விழா நடைபெறுவதையிட்டு நாமெல்லாரும் பேருவகை அடைகின்றோம்.

திருக்குட முழுக்கால் ஏழாலை அத்தியடி விநாயகரதும் ஏழு ஆலயங் களதும் புகழ் ஓங்கி உயர்வு பெற நல்லைக் குருமணியின் பாதங்களைப் பணிந்து எல்லாம் வல்ல விநாயகனை வேண்டுகின்றேன்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,**
**நல்லை ஆதீன முதல்வர்.**

# செஞ்சொற் செல்வரின் செய்தி



அத்தி முகவனை நித்தம் நினைப்பவர் சித்தம் மகிழ்வெய்தி வாழ்ந்து முத்தி பெறுவர். அருள்வளம் நிறைந்த ஏழாலைத் திருவூரில் ஞானமுதல்வனாக வீற்றிருக்கும் அத்தியடிப் பிள்ளையார் திருக்கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தம் அடைகின்றேன்.

தெய்வத் திருப்பணிகள் நாம் நன்றியோடு செய்ய வேண்டியவை. மனிதர்கள் புனிதம் பெறுமிடம் திருக்கோயில்களே. புனிதமான திருக் கோயில்களைக் காப்பது பத்த அடியார்களுடைய தலையாய கடமை. எம் முன்னோர்கள் கோயில்களையும் சைவப் பண்பாட்டு நெறிகளையும் முறையாகக் காத்தவர்கள். அந்நிய தேசத்தவர்கள் மண்ணைப் பறித்த போதிலும் மக்களின் மனங்களைப் பறிக்க முடியவில்லை. அதற்கு அடிப்படையாக அமைந்தது எமது தொன்மையான சமய விழுமியங்களே.

எக்காலத்திலும் கோயிற் திருப்பணிகளைக் காலந்தாழ்த்தக் கூடாது. உரிய காலத்தில் உரிய பணிகளை நாம் பெருமனதோடு நிறைவேற்ற வேண்டும். கோயில்கள் ஏன்? திருப்பணிகள் ஏன்? என வினா எழுப்புபவர்கள். மகத்துவம் அறியாதவர்கள். எங்கள் பாரம்பரியத்தைப் புனிதப் படுத்தி அடுத்த தலைமுறைக்கு கையளிப்பதே எம் பண்பாடு. ஏழாலைத் திருவூர் மக்கள் தெய்வ காரியங்களை சீராகப் பேணி வருபவர்கள். அவர்களின் அரும் பெரும் முயற்சியால் இக்கோயில் புனிதம் பெற்றுள்ளது. அனைவரும் இக்கைங்கரியத்தை வாழ்த்துவோம். இப்புனித கும்பாபிஷேகத்தை தரிசிப்போம். கும்பாபிஷேகக் காட்சியை காண்பது தவப்பேறாகும்.

பல வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் திருக்குடமுழுக்கைக் கண்டு ஆனந்தம் அடைவோம். அனைவரும் சகல செல்வங்களும் பெற்று நலமாய் வாழ இந்நாளில் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்
தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

# கும்பாபிஷேக சர்வ போதகர் வழங்கிய ஆசிகள்



ஏழாலைக் கிராமத்தில் எண்ணற்ற சிறப்பான ஆலயங்கள் காணப்பட்டாலும் ஏழாலை என்றதும் ஏழு கோயிலும் அத்தியடி விநாயகர் ஆலயமும் அனைவரின் நினைவுக்கு வரும். ஏழாலையின் ஆதி தெய்வமாக விளங்குபவர் அத்தியடி விநாயகர். தொன்மையும், வரலாற்றுச் சிறப்பும் கொண்ட ஆலயம். பத்தர்களின் நேர்த்தியை நிறைவு செய்பவ ராகவும் கிராமத்தவர்களின் இஷ்ட தெய்வமாகவும் அத்தியடி விநாயகர் விளங்குகின்றார்.

"நாவலர் சரித்திரம் படித்தவர்கள், படிக்கிறவர்கள் படித்தே தீரவேண்டிய மற்றொரு புத்தகம் ஆத்மஜோதி நா.முத்தையா எழுதிய ஏழாலை. "ஏழாலை" பல்வகைச் சிறப்புக்கள் அணிசெய்ய ஆத்மிக அருட் செல்வம் மேலிட்டு மிளிர்வது." என்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நூலின் அணிந்துரையில் குறிப்பிட்டது சிந்திக்கத்தக்கது.

ஏழாலை கண்ட இருபெரும் புலவர்களான இராவ் பகதூர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களும் காசிவாசி செந்திநாதையர் அவர்களும் தமிழ் கூறும் நல்லுலகால் நன்கு அறியப்பட்டவர்கள். திருக்கேதீச்சரத்தை வழிநடத்திய பேரறிஞர் மு. ஞானப்பிரகாசம், சைவசித்தாந்தப் பேரறிஞர் பண்டிதர் இலக்கிய கலாநிதி மு.கந்தையா, ஆத்மஜோதி நா.முத்தையா, புராணிகர் சிவ சண்முகவடிவேல் முதலான பல அறிஞர்கள் இந்த ஏழாலைக் கிராமத்துக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். ஆத்மஜோதி நா.முத்தையா அவர்களுடைய பாதம் பதிந்த தலம்.

இத்தகைய பெரியோர்கள் வாழ்ந்த ஏழாலைக் கிராமத்தின் ஆதி தெய்வமான அத்தியடி விநாயகப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் என்ற பெருஞ்சாந்தி விழா நடைபெறுவது கிராமத்திற்கும் நாட்டிற்கும் நன்மை தருவதாகும்.

சிவஸ்ரீ தி. சோமநாதக்குருக்கள் இந்த ஆலயத்தில் 22 வருடங்களுக்கு மேலாக ஆலய பிரதம சிவாசாரியராக இருந்து நித்திய நைமித்திய கிரியைகளை மிகவும் பத்திபூர்வமாகச் செய்து வருகின்றார். 2009 முதல் மஹோற்சவ குருவாகவும் இருந்து விநாயகப் பெருமான் திருவருளும் பெருங்கருணையும் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்தித்து வருகின்றார்.

இந்த ஆலயத்தை சந்ததி சந்ததியாக நிருவகித்து வரும் பாலசுப்பிர மணியம் அவர்கள் சைவ விழுமியங்களைப் பேணுபவர். குருமார்களைப் பேணுகின்ற மனவைராக்கியத்தாலும் சிறப்பினாலும் குருக்கள் ஐயாவோடு இணைந்து அவரும் பிள்ளைகளும் மருமக்களும் ஆலயத்திருப்பணியை பத்தியோடு செய்து வருகின்றார்கள்.

ஸ்ரீ இராமர் அணைகட்டிய போது உதவிய சிறு அணிலைப் போல ஏழாலை அத்தியடி விநாயகப் பெருமான் புனருத்தாரண கும்பாபிஷேக கைங்கரியத்துக்கு உதவிய அனைவருக்கும் கும்பாபிஷேகத்தின் புண்ணிய பலன்கள் கிடைக்க பிரார்த்தனை செய்வதுடன் கும்பாபிஷேக புண்ணிய பலன்கள் ஏழாலைக் கிராமத்தவர்கள், நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்தித்து ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

லோகா: ஸமஸ்தா: ஸ$^{6}$கி$^{2}$னோ ப$^{4}$வந்து

**பண்டிதர், தேசமான்ய, கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்,**
**நல்லை ஆதீன சிவாசாரியார்,**
**பிரதமகுரு விளைவேலி ஆதீனம்,**
**சாவகச்சேரி புராதன சிவன் தலம்.**

# பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசிச்செய்தி



சைவமும் தமிழும் சிறப்புற்று விளங்கும் ஏழாலையம்பதியிலே வீற்றிருந்து அருள் பாலிக்கும் அருள்மிகு அத்தியடி விநாயகப் பெருமான் பக்தர்களின் அல்லல் களைந்து அருள் வடிவாக விளங்குகின்றார்.

பிரணவமே வடிவாக விளங்கும் விநாயகர், விக்கினேசுவரர், கஜானனர், கணேசர், இலம்போதரர், ஹேரம்பர் முதலிய திருநாமங்களையுடையவர். ஞானம் உருவாயமைதலால் ஞான விநாயகராக, வழிபடுபவரின் இடர் களைவதால் விக்கின விநாயகராக, வேண்டிய வரமருள்வதால் கற்பக விநாயகராக, இஷ்ட சித்திகளை அருள்வதால் சித்தி விநாயகராக விளங்கு கின்றார்.

இத்தகைய விநாயகப் பெருமானை நித்தியம் தரிசிப்பவர்களுக்கு ஒரு மடங்கு பலனும் உற்சவ காலங்களில் தரிசிப்பவர்களுக்கு ஆயிரம் மடங்கு பலனும் மஹா கும்பாபிஷேகத்தைத் தரிசிப்பவர்களுக்கு இலட்சோபலட்சம் மடங்கு பலனும் கிடைக்கும் என ஆகமங்கள் கூறுகின்றன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ளும் சிவாசாரியப் பெருந்தகைகளும், அடியார்களும் வாழ்வில் சகல பேறுகளும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பூரணமான ஆனந்த வாழ்வு வாழ அத்தியடி விநாயகரைப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

ஸர்வே ஜனா: ஸுகி$^{2}$னோ ப$^{4}$வந்து

**சிவாகமசாகரம், சிவாகம பூசணம் சிவஸ்ரீ தி. சோமநாதக்குருக்கள்,**
**ஊரெழு,**
**பிரதம குரு,**
**ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலயம்.**

# வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்



ஏழு ஆலயங்களைத் தன்னகத்தே கொண்டதும் எல்லோருக்கும் கருணை நல்கி வாழ வைப்பதற்கு எழில்மிகு ஏழாலையில் அத்தியடியில் கோயில் கொண்டருளும் விநாயகப் பெருமானுக்கு இன்றைய தினம் குடமுழுக்கு என்னும் பெருஞ்சாந்தி விழா நிகழத் திருவருள் பாலித்துள்ளது.

மூவரும் தேவரும் எவரும் போற்றும் தனிப் பெருந்தெய்வம் விநாயகர் அவருக்கு செய்யும் வழிபாடுகளும் தோத்திரங் களும் பிரம்மத்தையே சேருவதால் விநாயக வழிபாடு எல்லாத் தெய்வங் களையும் வணங்கியதற்கு ஒப்பாகும்.

சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாள் நாயனாரும் திருக் கைலாசம் புறப்பட்டபோது அவர்கள் ஔவையாரையும் அழைத்துப் போக எண்ணினர். அப்பொழுது ஔவையார் விக்கினேஸ்வரனுக்கு பூசை செய்து கொண்டிருந்தார். பூசையை விரைந்து முடித்து வருமாறு அவசரப்படுத்தினர். ஔவையார் விநாயகர் பூசையே எனக்குக் கைலாசம் பூசையை முடித்த பின்பே வருவேன் என்று சொல்லிவிட்டார். நாயன்மார் இருவரும் போய் விட்டார்கள். ஔவையார் ஆறுதலாகப் பூசை செய்தார். பூசை முடிவில் பிள்ளையார் பிரசன்னமாகித் துதிக்கையால் ஔவையாரைத் தூக்கி ஒரே வீச்சில் கைலாசத்தில் நாயன்மார்களுக்கு முன்பு சேர்த்தார். அந்த ஔவையாரால் பாடப்பட்ட விநாயகர் அகவலை நாமும் பாடி ஏழாலை அத்தியடி விநாயகப் பெருமான் திருவடி தொழுது பேரின்ப வீட்டை அடைவோமாக.

பணிவுடன்

நாகலிங்கம் சிதம்பரநாதன்,

ஏழாலை கிழக்கு.

# ஏழாலை அத்தியடி விநாயகப் பெருமான் திருவருள் அனைவருக்கும் கிடைப்பதாக



எந்த நிகழ்வானாலும், எந்த விழாவானாலும், எதனை ஆரம்பிக்கும் போதும், எதனைச் சமர்ப்பணம் செய்யும் போதும் அங்கே விநாயகப் பெருமானை முன்னிற்கச் செய்வார்கள். விநாயகரை மிக எளிதாக எம் முன்னே தோற்றுவிக்கலாம். சாணியை உருட்டி அதன்மீது ஒரு அறுகம்புல்லைச் சாத்தினால் அவர் நம் முன்னே தோன்றிவிடுவார். அத்தன்மையிலே தோற்றம் பெற்று எழுந்தது தான் ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலயம் ஆகும்.

அத்தியடி விநாயகர் ஆலயத்தில் காலத்துக்குக் காலம் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஆலயம் சிறப்புற்று வருகின்றது. 2004 இல் புதிதாக வசந்த மண்டபம் ஜெய்சஞ்சயன் கட்டட ஒப்பந்த நிறுவனத்தின் பொறியியலாளர் அமரர் கனகஇரத்தினம் சண்முகநாதனால் சிறந்த முறையில் அமைத்துத் தரப்பட்டது. அமரர் உலகில் வாழும் சண்முகநாதன் அவர்களது ஆத்மா சாந்தி பெறவும் அவரது குடும்பத்தவர்களுக்கு ஆறுதலையும் அவர் விட்டுச் சென்ற பணியை அவரது மைந்தன் தொடரவும் அத்தியடி விநாயகப்பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

இன்றைய தினம் 10.02.2018 மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது நாம் அனைவரும் செய்த பாக்கியமாகும். உலகில் சாந்தியும் சமாதானமும் அன்பும் நிலைபெற ஏழாலை அத்தியடி விநாயகப் பெருமான் திருவருள் புரிவாராக.

**மு.பாலசுப்பிரமணியம்,**
**அறங்காவலர்,**
**அத்தியடி விநாயகர் தேவஸ்தானம் ,**
**ஏழாலை.**

# ஏழாலை அத்தியடி விநாயகர்

# ஆலய வரலாறு



திரு.சி.முருகேசு உபாத்தியாயர்
(அத்தியடி விநாயகர் ஆலய ஆதீனகர்த்தா)

ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலயம் அமைந் திருக்கும் ஏழாலைக் கிராமம் இலங்கைத் திருநாட்டின் சிரசாக விளங்கும் யாழ்ப்பாணத்தின் வலிகாமம் தெற்குப் பகுதியில் அமைந்துள்ளது. சித்தர்கள், ஞானிகள், யோகிகள், தத்துவவாதிகள், தமிழறிஞர்கள் முதலான பலரும் வாழ்ந்த கிராமம். தன் பெயரிலேயே ஆலயம் என்ற சொல்லை உள்ள டக்கியிருக்கும் இக் கிராமத்தின் நாற்றிசைகளிலும் ஆலயங்கள் மிகுந்து காணப்பட்டாலும், இதன் மத்திய பகுதிதான் அமைதியான, பத்தி பூர்வமான வழிபாடுகள், பூசைகள் நிகழ்த்தக்கூடிய இயற்கையோடு இயைந்த இடமாக விளங்குகின்றது.

ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்கு முன் ஏழாலையின் மத்திய பகுதி நிலங்களெல்லாம் நெல் வயல்களாகவே காட்சி தந்தன. விவசாயத்தை தம் முக்கிய தொழிலாகக் கொண்டு வாழ்ந்த அக்கால மக்கள் குளத்து நீரையும், தோட்ட நிலத்தின் மண்வளத்தையும் நம்பி நெல் பயிரிட்டனர். ஆடம்பரமற்ற வாழ்க்கை வாழ்ந்த அந்த மக்களிடம் கடவுள் பத்தி மிகுதியாக இருந்தது. எதனைத் தொடங்கும் போதும் கடவுளை நினைந்து நேர்த்தி செய்வதாகச் சங்கற்பம் பண்ணிவிட்டே செய்வார்கள்.

அந்த வயற் காணிகளிலே, காணியின் உரித்தாளர்களும் விவசாயம் செய்தார்கள்; காணிச் சொந்தக்காரரிடமிருந்து குத்தகைக்கு நிலம் எடுத்து மற்றவர்களும் நெல் பயிரிட்டார்கள். இவர்களில் யாராயிருந்தாலும் உழுவதற்குக் கலப்பையும் மாடுமாக வயல் நிலத்தில் இறங்கும் போதே கடவுளைப் பிரார்த்தித்து நேர்த்தி வைப்பார்கள்.

அவர்களது வேண்டுதலின்படி, நெல் விளைந்து கதிர் முற்றியதும் அறுவடை செய்து புதிர் எடுத்துப் பொங்கல் செய்வார்கள். பொங்கிப் படைப் பதற்கு அவர்கள் தேர்ந்தெடுத்த இடம் வயல்களுக்கு அருகேயுள்ள வெளியான மேட்டுப்பகுதி. அது தோட்ட நிலங்களுக்கு வடக்குப் பக்கமாக இருந்தது.

இவ்வாறு நெல் அறுவடை செய்யும் ஒவ்வொரு தடவையும் சாணியிலே பிள்ளையார் பிடித்து வைத்துப் பொங்குகின்ற வழக்கத்தினால் பிள்ளையார் பிடித்த சாணி உருண்டைகள் அவ்விடத்தில் நிறையச் சேர்ந்து விட்டன. உருண்டையான சாணியும், அதிற் சேர்ந்த அறுகம்புல்லும் காய்ந்து இறுகிவிட்டால் நீண்ட காலத்திற்கு அழியாமல் இருக்கும் இயல்புடையன.

அந்த இயல்பினால், பிள்ளையார் பிடித்த சாணி உருண்டைகள் அங்கே சிறு குன்று போல் குவிந்து அவ்விடத்தைப் புனிதப்படுத்தி ஆலயங்கள் அமையக்கூடிய சூழலாக அவ்விடத்தை மாற்றின.

நெல் அறுவடை செய்யும்போது மட்டும் அங்கே பொங்கல் செய்து வழிபட்ட அவ்விட மக்கள், தினமும் போகும் போதும், வரும்போதும் சாணிப் பிள்ளையாரை வணங்கி ஆலயமாகவே அதை மாற்றினர்.

வேளாண்மை செய்பவர்களே அந்த நிலங்களின் உரித்தாளர்களாய் இருந்தனர். அவர்கள் மனமுவந்து அவ்விடத்தை ஆலயமாக்குவதற்கு அநுமதித்தனர். அந்தக் காலத்து மக்கள் ஆலயங்களுக்காக அவற்றின் வளர்ச்சிக்காகத் தமது சொந்தக் காணிகளை வழங்கும் வள்ளல்களாக இருந்திருக்கின்றனர். வயல்வெளியில் அத்திமரத்துக்குக் கீழ் எழுந்தருளிய விநாயகர் ஆலயத்துக்காக, அவ்விடத்திலிருந்து வடக்குப் பக்கமாக அரைக் கிலோமீற்றர் தூரத்தில் ஏறக்குறைய பதினைந்து பரப்பு அளவுள்ள காணியும் வழங்கப்பட்டது.

ஆரம்பத்தில் கொட்டகையாக இருந்த அக்கோயில் காலகதியில் ஆகமவிதியிலமைந்த கட்டடமாக உருப்பெற்றது. ஆதியில் பிரதிஷ்டை



செய்யப்பட்டிருந்த மூலாதார கணபதி 1975 இல் கும்பாபிஷேகத்தின் போது கொடித்தம்பத்தின் முன்னர் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1975 இல் கர்ப்பக் கிருகத்தில் புதிதாக விநாயகப் பெருமானுடைய அழகான சிறிய கருங்கல் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. புதிய மூலவரை ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் ஆதீன கர்த்தாவாகிய திரு.முருகேசு ஆசிரியர் அவர்களிடம் வழங்கியிருந்தார். தலவிருட்சமாக ஆலய முன்றிலில் ஓர் அரசமரம் பெருவிருட்சமாக வளர்ந்தது.

இந்த இடத்தின் அற்புதமாக ஒரு விடயத்தைக் குறிப்பிடலாம். ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலயத்தை ஒட்டியதாக ஒரு புறத்தில் அத்தியடி முருகன் ஆலயமும், மறுபுறத்தில் புங்கடி புவனேசுவரியம்பாள், புங்கடி அம்பலவாணேசுவரர் ஆலயங்களும் அமைந்து வளர்ச்சியுற்றன. நான்கு ஆலயங்களையும் ஒருமித்து வலம்வரக்கூடியதாக இடைவெளியின்றி ஒன்றோடொன்று இணைந்ததாக அவை அமைந்த சிறப்பினைக் கொண்டுள்ளன. இவற்றோடு பெரிய தம்பிரான் ஆலயம், காளி கோயில், வயிரவர் கோயில் ஆகிய 3 ஆலயங்களும் அருகே அமைந்துள்ளன.

ஏழு ஆலயங்களும் ஒரே சூழலில் அமைந்துள்ளமையால் "ஏழாலயம்" என்ற பெயர் வழங்கி வந்தது. காலகதியில் அம் கெட்டு ஏழாலை என மருவி வழங்கி வரலாயிற்று.[2] ஏழு கோயில்களையும் ஒன்று சேர்த்து, 'எழுதல ஊர்" "ஏழாலையலூர்' என்று வழங்கி ஏழாலை என்று பெயர் வந்ததாகவும் கருத்து நிலவுகின்றது. பரந்த நிலப்பரப்பில் ஏர்களைக் கொண்டு, ஆழமாகவும் அகலமாகவும் அலையலையாகவும் உழுது விவசாயத் தொழில் மேற்கொண்டிருந்தமையால் ஏர்+அலை எனுஞ் சொல் காலக்கிரமத்தில் மருவி (ஏர்+ஆலை) ஏராலையாகிப் பின் அச்சொல் திரிந்து ஏழாலை ஆயிற்று என்றும் கூறப்படுகின்றது.[3]

நான்கு ஆலயங்களிலும் மிகப் பழமை வாய்ந்ததாக விளங்கிய அத்தியடி விநாயகர் ஆலயம் தோன்றிய காலம் இருநூறு வருடங்களுக்கு முற்பட்டதாகும். 1902 ஆம் ஆண்டு கொடியேற்றம், இரதோற்சவம் முதலான திருவிழாக்கள் நடைபெற்றுள்ளன.[4]

அக்காலத்தில் அத்தியடி விநாயகர் ஆலயம் அமைந்துள்ள சூழலில் மிகப்பெரிய மறுமலர்ச்சி ஏற்பட்டிருந்தது. ஆலயங்கள் அடுத்தடுத்ததாய் அமைந்து பத்திநெறி செழிக்கச் செய்தது போலவே சைவப் பாடசாலையொன்று தாபிக்கப்பட்டு கல்வித்துறையிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டது. அதற்குக் காரணகர்த்தர் ஏழாலையைச் சேர்ந்த தாயின் வயிற்றில் உதித்தவரான இராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள். அவர் 1876ஆம் ஆண்டு ஆவணி மாதம் பத்தாம் நாள் இந்த ஆலயச் சூழலிலே சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார்.

1876ஆம் ஆண்டு முதல் இயங்கிய சைவப்பிரகாச வித்தியாசாலையை தாபகரான சி. வை. தாமோதரம்பிள்ளை தம் உத்தியோகம் காரணமாக இந்தியாவுக்குச் சென்றிருந்தாலும் உரிய பணத்தினை அனுப்பி கல்விப் பணி இடையூறு படாதபடி காத்தார்.



பெரும் புலவரான சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் ஆரம்பகாலத்தில் இப்பாடசாலையில் உதவி ஆசிரியராகவும் பின்னர் தலைமை ஆசிரியராகவும் கடமை புரிந்திருக்கிறார். அந்தப் பணியின் காரணமாக புலவர் ஏழாலைக்கு வரும் போது, பாடசாலைக்கு அண்மையில் இருந்த அத்தியடி விநாயகப் பெருமான் ஆலயம் அவரை ஈர்த்திருக்கிறது. பாடசாலைக்கு வந்து போகும் போதெல்லாம் விநாயகப் பெருமானின் அருளாட்சியை அனுபவித்த புலவர், விநாயகப் பெருமானின் மீது திருவூஞ்சற் பிரபந்தம் பாடியுள்ளார். அப்பிரபந்தம் பாடப்பட்ட ஆண்டு 1897 என்று மூலப்பிரதியிற் குறிப்பிடப்பட்டுள்ளது.[5]



தாமோதரம்பிள்ளை அவர்கள் நோய்வாய்ப் பட்டிருந்த இறுதிக் காலத்தில் 1898ஆம் ஆண்டு இப்பாடசாலை மூடப்பட்டது. பாடசாலை இயங்கிய 22 வருடங்களும் குமாரசுவாமிப்புலவருக்கு ஏழாலையுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது.

1920களில் அத்தியடி விநாயகர் ஆலயம் பாதிப்புக்குள்ளானது. பூசையின்றிப் பூட்டிக் கிடந்த நிலை ஏற்பட்டது. ஆயினும் அந்நிலை நீடிக்க வில்லை. அவ்வேளையில் அத்தியடி விநாயகர் ஆலயம் அமைந்துள்ள பகுதி முழுவதற்கும் பொறுப்பாளராகக் கடமையாற்றியவர் வேலுப்பிள்ளை விதானையார் அவர்கள். அக்காலத்தில், பிரபல்யம் மிக்கவராக, திறமையாகச் செயலாற்றுபவராக விளங்கிய அவர், பூசையின்றி இருக்கும் இந்த ஆலயத்தின் நிலையைக் கண்டதும், தகுதிவாய்ந்த ஒருவரிடம் இவ்வாலயத்தின் நிருவாகப் பொறுப்பை ஒப்படைப்பதென்று தீர்மானித்தார். அவரு

டைய நிருவாகத்துக்கு உட்பட்ட பிரதேசத்திலேயே அத்தகைய தகுதி வாய்ந்த ஒருவர் இருந்தார்.

புனிதமான ஆசிரியத்தொழில் புரியும் நல்லாசானாக, ஒரு குருவை நாடிச்சென்று ஞானம் பெற்ற பத்திமானாக, கல்வி கேள்விகளில் வல்லவராக, காருண்ய சீலராக, ஆளுமைமிக்கவராக, சமூக சேவையாளராக விளங்கிய முருகேசு உபாத்தியாயர் அவர்களையே இந்த ஆலய நிர்வாகப் பணிக்காகத் தேர்ந்தெடுத்து அவரிடம் ஆலயத்தை ஒப்படைத்தார் வேலுப்பிள்ளை விதானையார். தமக்குக் கிடைத்த பெரும் பேறாகக்கருதி இப்பணியினை ஏற்ற முருகேசு உபாத்தியாயர் முழுமையான அர்ப்பணிப்போடு தொண்டாற்றினார்.

பூசை தடைப்பட்டிருந்ததால் தம் சொந்தப் பணத்தில் அதற்குரிய பிராயச்சித்த பரிகாரங்களைச் செய்து, அர்ச்சகரை ஏற்படுத்தி நித்திய பூசையை ஒழுங்காக்கினார். திருப்பணிகளைச் செய்து கும்பாபிஷேகம் நிகழ்த்துவித்தார்.

முருகேசு உபாத்தியாயர் அவர்கள் அத்தியடி விநாயகர் ஆலயத்தைப் பொறுப்பேற்ற பின், விநாயகருக்குரிய விரத நாள்களும், திருவெம்பாவை நாள்களும் சிறப்பான விழாக்களாகக் கொண்டாடப்பட்டன. திருவெம்பாவை முதல் ஒன்பது நாள்களும் அபிஷேக ஆராதனைகளுடன் திருவெம்பாவை ஓதப்படும். பத்தாம் நாளான திருவாதிரை விசேடமான அபிடேகம், பூசைகளுடன் பெருவிழாவாகக் கொண்டாடப்படும். விநாயகர் சதுர்த்தியும், பிள்ளையார் பெருங்கதை நோன்பு என்று சொல்லப்படும் விநாயக சஷ்டியும் கோலாகலமான முறையில் அநுட்டிக்கப்பட்டன.

முருகேசு உபாத்தியாயர் அவர்கள் விநாயக சஷ்டியன்று விசேட அபிஷேக ஆராதனைகள் செய்விப்பார். சர்க்கரைப் பொங்கல் மோதகம், அப்பம், அவல், சுண்டல், எள்ளுப்பொரி, வள்ளிக்கிழங்கு முதலிய பலகார வகைகளும் விதவிதமான பழவகைகளும் நைவேத்தியம் செய்யப்படும். முருகேசு உபாத்தியாயர் பிள்ளையார் கதையைத் தாமே பத்தி பரவசத்தோடு படிப்பார். ஆலயத்துக்கு வந்த பக்தர்களுக்கு படைத்த நைவேத்தியங்களை பிரசாதமாகக் கொடுத்து மகிழ்வார்.

அக்காலகட்டத்திலே, கல்வியையும், தொழில் வாய்ப்புக்களையும் சலுகைகளாகக் காட்டி, வேற்று மதத்தவர் பிரசாரம் செய்து நம்மவரை மதமாற்றம் செய்தனர். அந்த இக்கட்டான காலகட்டத்தில் சைவ ஆலயங் களில் பூசை வழிபாடுகள் நலிவடையாமல் நடைபெறச் செய்வதும் சைவத்தைப் பாதுகாப்பதற்கு அவசியமாக இருந்தது. அத்தியடி விநாயகர் ஆலயத்தின் மூலம் அப்பணியினைத் திறமையாகச் செய்து கொண்டிருந்த முருகேசு உபாத்தியாயர் சைவசமயத்தின் பாதுகாப்புக்காக இன்னொரு காத்திரமான பணியினையும் ஆற்றினார்.

சைவச்சிறார்கள் சைவச் சூழலிலே கல்வி கற்றால்தான் அவர்களுக்குச் சமய உணர்வு பெருகும். ஆலயத் தொண்டுகளிலும், வழிபாட்டிலும் ஈடுபாடு கொண்டு ஆலயங்களைப் பாதுகாத்து முன்னேற்றுவார்கள் என்பதைப் புரிந்து கொண்ட முருகேசு உபாத்தியாயர் உள்ளிட்ட சில சைவச் சான் றோர்கள் 1940 ஆம் ஆண்டு ஏழாலையின் வடக்கு, கிழக்கு, மத்தி ஆகிய மூன்று பகுதிகளுக்கும் மையமான இடத்தில் சைவப்பாடசாலை ஒன்றை நிறுவுவதற்குத் தீர்மானித்தார்கள்.

பாடசாலை நிறுவுவதற்கு நிலம் வழங்க முன்வந்தார் முருகேசு உபாத்தியாயர். அவரது நிருவாகப் பொறுப்பிலிருந்த அத்தியடி விநாயகர் ஆலயத்துக்கு உரித்தான நிலத்தினைப் பாடசாலைக்கு வழங்கினார். அந்த நிலம் இருந்த இடம் ஏழாலையின் வடக்கு, கிழக்கு, மத்தி ஆகிய பகுதிகளில் இருந்த சைவப்பிள்ளைகள் யாவரும் கல்வி கற்கக்கூடிய மையப்பகுதியில் இருந்தது. ஏழாலை சைவ மகாஜனா வித்தியாசாலை என்ற பெயரில் பாடசாலை உருவானது.

அப்பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்ற பின் இந்நிலத்துக்குரிய பெறுமதியை கொடுக்க முன்வந்தும் அவர் அதனை ஏற்கவில்லை. தமது வருவாயிலேயே அத்தியடி விநாயகர் ஆல்யத்தின் பூசைகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றினார்.

இவ்வாலயம் மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1975ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நிகழ்ந்தது. முருகேசு உபாத்தியாயர் அவர்களே அதற்குரிய முழுச்செலவினையும் பொறுப்பேற்று நடத்தினார்.

17.04.1981 அன்று சிவபதம் அடையும் நாள்வரை அவர் இந்த ஆலயத்தைச் சிறந்த முறையில் பரிபாலனம் செய்தார். தமக்குப் பின்னர் ஆலயம் சீராக நடைபெறுவதற்கான வழிவகைகளையும் தாம் இருக்கும்போதே செய்து விட்டார்.

தமது பிள்ளைகளுள் இளையவரான பாலசுப்பிரமணியம் அவர்களே இதற்குத் தகுதியானவர் என்று தேர்ந்தெடுத்து தமக்குப் பின் அவரே ஆலயத்தின் நிர்வாகியாக விளங்குவார் என்று உயில் எழுதி வைத்திருந்தார்.

அந்த உயிலின் பிரகாரம் தந்தையாரின் மறைவிற்குப் பின்னர் பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆலயத்தைப் பொறுப்பேற்றார். சகோதரர்களும், மருமக்களும், பிள்ளைகளும், உறவினர்களும் விநாயகப் பெருமான் அடியவர்களும் அவருக்கு உறுதுணையாக இருந்து வருகின்றனர்.

எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் தேரோட்டம் நடைபெற்ற இவ்வாலயத்தில் மீண்டும் தேர்த்திருவிழாவை நிகழ்த்த வேண்டுமென்று முருகேசு உபாத்தியாயார் அவர்கள் தம் இறுதிக்காலத்தில் விருப்பம் கொண்டு அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். ஆயினும் அது நிறைவேறுவதற்குள் அவர் இறைவனடி சேர்ந்து விட்டார்.

பாலசுப்பிரமணியம் அவர்கள் அத்தியடி விநாயகர் ஆலயத்தைப் பொறுப்பேற்றதும் தமது தந்தையாரின் அபிலாசைகளை நிறைவேற்றுவதே தம் கடமையெனக் கருதிச் செயற்பட்டார். முருகேசு உபாத்தியாயர் ஆத்மார்த்தமாகக் கொண்டிருந்த விருப்பம் அவர் மறைந்த மறு வருடமே நிறைவேறியது. 1981ஆம் ஆண்டு அவர் இறைபதம் எய்த 1982ஆம் ஆண்டு அத்தியடி விநாயகர் ஆலயத்தில் மகோற்சவப் பெருவிழா ஆரம்பித்து தேரோட்டம் நிகழத் திருவருள் பாலித்தது. வைகாசி மாதப் பூரணைத் தினத்தை தீர்த்தோற்சவமாகக் கொண்டு மகோற்சவம் நடைபெற்று வருகிறது.

2004 ஆம் ஆண்டு அத்தியடி விநாயகர் ஆலயத்தில் மேலும் பல திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டது. நல்லை ஆதீன சிவாசாரியார் தேசமான்ய, பண்டிதர், கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்

பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து 29 வருடங்களுக்குப் பின்னர் 09.02.2004 அன்று உத்தர நட்சத்திரத்தில் கும்பாபிஷேகப் பெருவிழாவை செய்வித்து அத்தியடி விநாயகரது அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்கச் செய்தார்.

14 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று 10.02.2019 ரேவதி நட்சத்திரத்துடன் கூடிய சுப முகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புடன் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. 1997 முதல் ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலய பிரதம குருவாக இருந்து. நித்திய நைமித்திய பூசைகளை பத்திபூர்வமாகச் செய்துவருகின்ற சிவாசாரியார். சிவாகம சாகரம், சிவாகம பூஷணம், கிரியா சாகரம் சிவஸ்ரீ தி.சோமநாதக் குருக்கள் அவர்கள் இன்று 10.02.2019 பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகம் செய்விக்க விநாயகப் பெருமான் திருவுளம் கொண்டார்.

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே "

---


1. சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள் 1897 இல் ஏழாலை அத்தியடி விநாயகர் மீது பாடியருளிய வெண்பா
2. ஏழாலை - ஆத்மஜோதி நா.முத்தையா
3. எங்களூர் ஏழாலயலூர் - தி.க. முத்துச்சாமி
4. ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலய வரலாறு - திருமதி. மு. இந்திராணி
5. ஏழாலை அத்தியடி விநாயகர் திருவூஞ்சல் முதலியன - சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள் 1897 ஏவிளம்பி வருடம் ஆனி மாதம்.